# மகேசன் சிரிப்பு

அ.பெ.ா.செல்லையா.

நேற்றிருந்ததுபோல இன்றில்லை. இன்றிருப்பது போல நாளை இருக்காது. உலகம் உருள்கிறது. விநாடிக்கு விநாடி மாற்றம் அடைந்து வருகிறது.

எத்தனையோ புதுமைகள்! வளர்ச்சிகள்! மாற்றங்கள்! தினந்தோறும் அரங்கேறிக் கொண்டு இருக்கின்றன. பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே என்ற நன்னூல் கருத்துப் போல நடைபெறுகின்றன.

ஆக்கமான பல செயல்களுக்கிடையே சில அழிவுகளும் நடைபெறவே செய்கின்றன. தேவையற்ற போர்களினால் சரிந்த சாம்ராச்சியங்கள் நலிந்த நகரங்கள் உருக்குலைந்த ஊர்கள் மடிந்த மக்கள் அதிகம். இறாக்கிய போரின் கொடுமையை நேரில் பார்த்ததுபோலத் தொலைக்காட்சியில பார்த்திருக்கலாம்.!

ஆக்கம் ஒருபுறம் அழிவு இன்னொரு புறம் நடைபெறுகிறது. அழிவு தவிர்க்கப்பட வேண்டும். ஆக்கமே இலட்சியமாகக் கொள்ளப்பட வேண்டும். உதவிட முடியாவிட்டால் உபத்திரமாவது செய்யாதிருக்க வேண்டும். மக்கள் பணியே மகேசுர பூசையாகக் பொள்ளப்பட வேண்டும்.

மக்கள் வாழ்ந்திடத் தம்மை அர்ப்பணித்த மக்கள் பலர் உள்ளனர். ஏழைகளுக்கு இரங்கினர், எளியோருக்கு உதவினர், வசதியற்றோருக்கு வாய்பளித்தனர், நோயுற்றோரை மரணத்தினின்றும் ம ட்டனர், வாழ்வை இலகுவாக்கினர், வளமான வாழ்வு தந்தனர்.

அரை ஏக்கர் நிலத்தில் மாடுகளை வைத்து மாய்ந்தான். ஆனால் ஆயிரம் ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்திடும் நிலைக்கு வளர்ந்தான் உழவு எந்திரத்தை வைத்து மனிதன்!

இரத்த வாந்தி என்றால் முனி அடித்தது என அஞ்சினான். ஆனால் இதயத்தின் கோளாறு அமுக்கம் என அறிந்து பொண்டான்.!

மறு பிறப்பு பாவ புண்ணியம் எனப் பயந்தான். படைப்பு இல்லை அது பரிணாமத்தின் வளர்ச்சி எனப் புரிந்து கொண்டான்.

ஆயிரம் பேரின் வேலையை அறையில் ஒரு சிறு கருவியை வைத்தே செய்திடக் கற்றுக் கொண்டான். பல்லாயிரம் மைல் தொலைவிலிருக்கும் ஒருவரோடு கதைக்கவும் பார்க்கவும் கருவிகளைக் கண்டான்.

உலகினையே தனது வ ட்டிற்குள் அறைக்குள் பொண்டு வந்துவிட்டான். ஆனந்தமாக வாழ வாய்ப்பினை ஏற்படுத்திக் கொண்டான். அதே நேரத்தில் அகதியாகவும் புலம் பெயர்ந்தும் வறுமையால் வாடியும் பசியின் கொடுமையால் நலிந்தும் மெலிந்தும் உள்ள மக்களும் வாழ்கிறார்கள்.

தமக்குக் கிடைத்த வாய்ப்பினை வசதியினை மற்றவர்க்கும் பகிர்ந்து கொள்ளும் மனநிலை வேண்டும். இல்லாதவர்க்குக் கொடுத்திடும் பாங்கு வேண்டும்.. வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை மற்று எல்லாம் ஒன்றை எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மையை உடையது.

ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல் அப்பசியை மாற்றுவார் ஆற்றலின் பின. குறள் என்பது குறள். பசியைப் பொறுத்துக் கொள்ளும் நோன்பைக் கடைப் பிடிப்பதை விட பசித்திருக்கும் ஒருவருக்கு உணவு அளிப்பதே சிறந்ததாகும். நாம் நல்லாக இருந்தால் பிறரையும் நன்றாக இருக்க வைக்க வேண்டும்.

உலகம் வளருகிறது. நாமும் வளரவேண்டும் பிறரையும் வளரவிடவேண்டும்.

உலகம் வளருவதற்கு முக்கியமான காரணம் விஞ்ஞான முன்னேற்றந்தான். விஞ்ஞானம் மெஞ்ஞானத்தை அழிப்பதாகச் சிலர் சொல்கின்றனர். ஆனால் விஞ்ஞானமே மனிதனை வாழ வைக்கிறது. விஞ்ஞானத்தால் கிடைத்த வாய்ப்பு வசதியினைச் சிலர் தத்தம் தன்னலத்திற்கும் பயன்படுத்தி அழிவினை உண்டாக்குகிறார்கள். ஒழுங்கினைக் கெடுத்துக் கொள்கிறார்கள்.

ஈராக்கியப் போரில் அனர்த்தங்கள் அதிகம். சதாம் உசேன் சொன்னார் இஸ்லாம் மதத்தின் சுன்னிப் பிரிவின் தெய்வப் போர் என்று. சனாதிபதி புஷ்சும் கிறித்தவத்தின் கடவுள் போர் என்றார். இங்கே ஆத்ம கீ மெஞ்ஞானம் அழிவினை உண்டாக்கி

இருக்கிறது. முயற்சி திருவினை ஆக்கும் என்ற குறளமுத விஞ்ஞானம் கணினி போன்ற பலவித விஞ்ஞான உபகரணங்களால் வாழ்வை வளம்படுத்தி உள்ளது.
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் எனக் கொண்டால் மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் போல மானம் உடையவர்களாக மக்கள் வாழ்ந்தால் அஞ்ஞானம் அகன்று மெஞ்ஞானம் விளங்கி விஞ்ஞானம் ஓங்கும்
நல்லதை நாடவேண்டும் நல்லாய் இருக்கவேண்டும் நல்லதைச் செய்யவேண்டும் நாமும் முயலவேண்டும். நமது பங்களிப்பும் சேரவேண்டும். யாரும் செய்யட்டும் நாம் பயன்படுத்திடலாமென நினைக்கக்கூடாது. கொண்டு வா திண்டு பாப்பம் என இருக்கக்கூடாது. சோம்பல் மிகக் கெடுதி பாப்பா என்றார் பாரதியாரும். குலம் சிறக்க வேண்டுமானால் சோம்பலை ஒழித்து ஊக்கத்துடன் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். சோம்பேறிகளின் வாழ்க்கையில் குற்றங்களும் பெருகிவிடும். குடும்பப் பெருமையும் சீரழிந்து போய் விடும்.
ஆகவே நற்செயல்களில் பங்கேற்க வேண்டும். பொறியியல் துறையில் மருத்துவத் துறையில் எத்தனை எத்தனை கண்டுபிடிப்புகள். அவற்றில் நமது பங்களிப்பு என்ன? ஏன் செய்திடமுடியாது?
பல அற்புதங்களைப் பற்றி பக்தி இலக்கியங்கள் கூறுகின்றன. அவற்றில் சிலவேனுங்கூட அறிவியல் கண்டுபிடிப்பாக ஏன் அமையவில்லை? மக்களுக்குப் பயன்படும் ஒரு கருவியாகவோ மருந்தாகவோ ஏன் வரவில்லை? பசியினால் நோயினால் மக்கள் வாடிட அற்புதங்கள் பற்றிப் பேசுவதனால் நன்மை ஏதமில்லை.
நவீன மருத்துவ புதுமைகள் பல மக்களை வியப்பில் ஆழ்த்துகின்றன.. அவை மக்களின் நல்வாழ்விற்கு உதவிடும் வகையில் அறிவியல் அறிஞர்கள் உழைத்து வருகிறார்கள். உண்ணாமல் உறங்காமல் பல இழப்புக்கள் மத்தியில் உழைத்திடும் அவர்களின் உழைப்பு மனித குலத்திற்கு ஒளியேற்றிக் கொண்டிருக்கிறது. மக்கள் வாழ்ந்திட உதவவேண்டும்.
அவரவர் தத்தம் வாய்ப்பு வசதிக்கேற்ப உதவிட வேண்டும். பொருள் வைத்திருப்போர் பொருள் தரவேண்டும் அறிவுடையோர் அறிவினை கொடுக்கவேண்டும். இரத்தம் உறுப்பு எனப் பல தானங்கள் இன்று மக்களை வாழ வைக்கின்றன.
உதவிட வேண்டும், தனித்து உதவிட வேண்டும், கூட்டாக உதவிட வேண்டும். மக்கள் மகிழ்திட உதவிட வேண்டும். மக்கள் மனம் மகிழ்ந்த சிரிப்பே மகேசன் சிரிப்பு.